திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : முனைவர்.ச.விசாகன், இ.ஆ.ப.,

ந.க.எண் : 7400/2019/ஊ.வ.1 நாள்.16.02.2022.

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – திண்டுக்கல் மாவட்டம் - மருத்துவ இயலாமை காரணமாக 12.02.2019 பிற்பகல் ஓய்வு பெற்ற மின்பணி உதவியாளர் திரு.சு.ஆறுமுகம் என்பவரது வாரிசுதாரரும்/மகனுமான திரு.ஆ.சண்முகபிரகாஷ் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து - ஆணையிடல்.

பார்வை :

1. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்:7400/ 2019/ஊ.வ.1, நாள்:27.11.2019.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7400/2019/ஊ.வ.1, நாள்: 28.07.2020
3. அரசாணை (நிலை) எண்: 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள்: 26.02.2021.
4. அரசுக்கடித எண்:6895/இ3/2021-5, நாள்:14.12.2021
5. சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.18355/2021/டி2, நாள்: 18.12.2021.

******

**ஆணை:**

திண்டுக்கல் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் மின்பணி உதவியாளராகப் பணிபுரிந்து 12.02.2019 பிற்பகல் அன்று மருத்துவ இயலாமைக் காரணமாக பணி ஓய்வு (Retirement Due to Invalidation on Medical Grounds) பெற்ற திரு.சு.ஆறுமுகம் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.ஆ.சண்முகபிரகாஷ் என்பவருக்கு மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 02.12.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியை அரசளவில் வரன்முறை செய்து உரிய ஆணைகள் பிறப்பிக்கக் கோரி, மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதம் வழியே சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நேர்வில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட ஆணை மற்றும் வழிமுறைகள் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக, மேலே பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் "மாவட்ட ஆட்சித் தலைவர் இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்குமாறு" தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலே பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, தனியரது உரிய அசல் ஆவணங்களுடன் மீள பெறப்பட்ட முன்மொழிவானது மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நடவடிக்கை மேற்கோள்ளும் பொருட்டு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. அவ்விபரம் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

1. மருத்துவ இயலாமைக் காரணமாக பணி ஓய்வு பெற்ற திரு.சு.ஆறுமுகம் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் (Approved Probationer) பணியாளர் ஆவார்.
2. அரசு ஊழியர் திரு.சு.ஆறுமுகம் மருத்து இயலாமைக் காரணமாக ஓய்வு பெற்ற பின்பு, அன்னாரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், இவரது மனைவி திருமதி.நாகலெட்சுமி என்பவரது பெயரில் தோட்டனூத்து கிராமம், புல எண்.243/7G2-இல் 1200சதுர

அடி நிலம் பட்டா எண்.3109-இன்படி தாக்கலாகியுள்ளதாகவும்,அதில் வீடு ஒன்றும் உள்ளதாகவும் இதைத் தவிர அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஏதும் இல்லை என்றும், இவரது குடும்பத்தில் எவரும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை என்றும் திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் ப.மு.எண்:6615/2019/அ1, நாள்: 01.10.2019 இன்படி சான்றளித்துள்ளார்.

3. மருத்துவ இயலாமைக் காரணமாக பணி ஓய்வு பெற்ற அரசு ஊழியர் திரு.சு.ஆறுமுகம் என்பவரது வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.ஆ.சண்முகபிரகாஷ் என்பவர் 09.10.2019 அன்று விண்ணப்பித்துள்ளார். அதாவது அரசு விதிகளின்படி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பித்துள்ளார்.

4. அவரது பிறந்த தேதி 12.06.1991 ஆகும். பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரது வயது 28 ஆகும். பணி நியமன நாளில் தனியரின் வயது 28 ஆகும்.

5. அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதற்கான கல்வி சான்றுகளின் மெய்த்தன்மை "திண்டுக்கல் மாவட்ட அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்" அவர்களின் கடித ந.கஎண்:000833/அ/ 2018, நாள்:21.11.2019இன்படி வரப்பெற்றுள்ளது.

6. தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை.

மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் ஐந்தில் காணும் கடிதத்தின்படி, திரு.ஆ.சண்முகபிரகாஷ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 02.12.2019 அன்று பணிநியமனம் பெற்றுள்ளதாலும், தனியர் பொருட்டு விதித்தளர்வு ஏதும் தேவையில்லையென அறியப்படுவதாலும் மற்றும் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதாலும், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 02.12.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்.

பெறுநர் :-

திரு.ஆ.சண்முகபிரகாஷ்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
திண்டுக்கல் (உரிய வழிமுறையாக)

நகல் :-

1. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை,சைதாப்பேட்டை, சென்னை-15.
2. கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல்.
3. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு.